## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை வள மற்றும் விவசாய வணிக (தனியார்) கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான

நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கிராந்துருக் கோட்டை விவசாயப் பண்ணையில் 1,113 ஏக்கர் 0 றூட் 37.76 பேர்ச் காணி மற்றும் தம்மின்ன விவசாயப் பண்ணையில் 100 ஏக்கர் காணி கம்பனியால் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளின் கணக்கீட்டு நியமம் 17.04 | கம்பனியின் சொத்தாக காணிகள் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்படவில்லை. கம்பனிக்கு காணி கையளிக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்குகளுக்கு கொண்டு வருதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பந்தியின் பிரகாரம் அந்தக் காணிகளின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அலுவலக உபகரணங்கள், வாகனம் மற்றும் இயந்திரப் பொறிமுறைகளில் மீள் மதிப்பீட்டின் காரணமாக ஏற்பட்ட ரூபா 640,000 இலாபம் மீளாய்வாண்டில் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமத்தின் 17 ஆம் பந்தியின் பிரகாரம் மேற்கொள்ள வேண்டிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படவில்லை. | மீள் மதிப்பீட்டு பெறுமதியும் (Additions) சேர்த்தலின் கீழ் கொண்டுவரப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளது. அது தனியாக Additions மற்றும் Re-valuations ஆக காண்பித்ததை சரிசெய்யப்பட்டு பதிவேடுகளுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் வெளிப்படுத்ததல் வேண்டும். |
| (இ) | முன்னைய ஆண்டுக்கான சீராக்கமாக ரூபா 814,905 வருமான ஒதுக்கத்தில் கழிக்கப்பட்டு ரூபா 1,274,358 சேர்க்கப்பட்டிருந்த போதிலும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமம் 10.23 இன் பிரகாரம் அதற்குரிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்யப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சீராக்கம் வெளிப்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமம் 28.18 இன் பிரகாரம் பணிக்கொடை கணிப்பிடும் போது ஆயட்கால எண்ணிக்கை பெறுமதியிடல் முறையை அடிப்படையாகக் கொண்டு பணிக்கொடை பொறுப்புக்கள் கணிப்பிடப்பட்டு இலாபம் அல்லது நட்டம் நிதிக்கூற்றுக்களில் சீராக்க வேண்டியிருந்த போதிலும் கம்பனி அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் சேவைக்காலம் 01-05 வருடங்களுக்கிடையிலான 07 ஊழியர்களுக்காக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமம் 28 இன் பிரகாரம் ரூபா 228,662 ஆன பணிக்கொடைப் பொறுப்புக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் சரி செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் ஆயுட்கால எண்ணிக்கை பெறுமதியிடல் முறையை அடிப்படையாகக் கொண்டு பணிக்கொடைப் பொறுப்புக்கள் கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (உ) | வணிக மரங்களாக விற்பனை செய்வதற்கு பதிவு செய்யப்பட்டிருந்த தம்மின்ன விவசாயப் பண்ணையில் 195 தேக்கு மரங்கள் மற்றும் கிராந்துருக் கோட்டை விவசாயப் பண்ணையில் 211 தேக்கு மரங்கள் என்பன இலங்கை கணக்கீட்டு நியமன இலக்கம் 41 இன் 10 ஆம் பந்தியின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கிராந்துருக்கோட்டை விவசாயப் பண்ணையில் 211 தேக்குமரங்கள் மற்றும் தம்மின்ன விவசாயப் பண்ணையில் 195 தேக்கு மரங்கள் என்பன இனங்காணப்பட்டு பதிவேடுகளுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இது தொடர்பாக பணிப்பாளர் சபை பத்திரம் ஒன்று சமர்ப்பித்து பணிப்பாளர் சபையினால் | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் இந்த மரங்களை மதிப்பீடு செய்து அப்பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நியமிக்கப்பட்ட குழுவொன்றின் மூலம் இந்த மரங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அப்பெறுமதி 2024 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 1,154,681 ஆன இருப்பு வேறுபாடுகள் மற்றும் ரூபா 1,113,911 ஆன பணிக்கொடை கொடுப்பனவுகள் சீராக்கப்பட்டிருக்கவில்லை. ரூபா 383,670 ஆன வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகள் அதிகரித்தமை காசு உட்பாய்ச்சலாக காண்பிக்க வேண்டியிருந்த போதிலும் அது ரூபா 1,916,226 காசு வெளிப்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தது. முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் ரூபா 155,172 ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கைப்பற்றுதல் காசு உட்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்ட போதிலும் அது ரூபா 903,614 காசு வெளிப்பாய்ச்சலாகும். காசுப்பாய்ச்சல் கூற்றில் சீராக்க முடியாத ரூபா 459,454 முன்னைய ஆண்டின் சீராக்கம் தொழிற்படு மூலதன மாற்றம் ஒன்றாக காண்பிக்கப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) கம்பனிக்குச் சொந்தமாகக் காணப்பட்ட தமுத்தேகமவில் அமைந்துள்ள நீராவிய விவசாயப் பண்ணை, கந்தளாய் விவசாயப் பண்ணை, பெலநறுவையில் அமைந்துள்ள சித்தபுர விவசாயப் பண்ணை மற்றும் வெலிக்கந்தவில் அமைந்துள்ள முத்துவெல்ல விவசாயப் பண்ணை என்பன 2005 – 2010 வருடங்களுக்கு இடையிலான காலத்தில் முறையான எழுத்து மூல ஆவணங்களால் மாற்றப்படாமல் மகாவலி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அந்த விவசாயப் பண்ணைகளுக்குச் சொந்தமான கிரயம் ரூபா 22,336,573 ஆன கட்டிடங்கள் மற்றும் பொருத்திகள், 26 வாகனங்கள், 45 அலுவலக உபகரணங்கள், 63 இயந்திர உபகரணங்கள், 03 மின்பிறப்பாக்கிகள் மற்றும் 260 தளபாடம் மற்றும் பொருத்திகள் கம்பனியால் பயன்படுத்தப்படாதிருந்த போதும் கம்பனிகளின் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. மேலும் அந்த சொத்துக்கள் இலங்கை மகாவலி அதிகார சபை அல்லது கம்பனியால் பௌதீக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | கம்பனியின் கட்டுப்பாட்டிலிருந்து நீக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்படுகின்ற விவசாயப் பண்ணைகளில் நீராவிய, கந்தளாய், சித்தபுர, முத்துவெல்ல, துங்கம என்ற விவசாயப் பண்ணைகளின் சொத்துக்கள் 2024 ஆம் ஆண்டில் கம்பனியின் மூலம் பௌதீக மெய்மையாய்வு செய்வதற்கு பணிப்பாளர் சபை பத்திரம் ஒன்று சமர்ப்பித்து மெய்மையாய்வுக் குழுவொன்று பெயரிடப்பட்டு அந்தக் குழுவிற்கு இலங்கை மகாவலி அதிகார சபையின் அங்கத்தவர்களையும் உள்ளடக்கி இந்தப் பணிகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | கம்பனிக்குரிய சொத்துக்கள் மாத்திரம் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2013 சனவரி முதல் 2023 திசெம்பர் வரை 110 மாத காலத்திற்காக ஊழியர் சேமலாப நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 25,840,605 பங்களிப்புப் பணம் கணக்காய்வுத் திகதியான 2024 ஏப்ரல் 04 ஆம் திகதி வரையிலும் செலுத்தப்படாதிருந்ததுடன் அதற்குரிய செலுத்த வேண்டிய ரூபா 6,208,029 ஆன மிகைக் கட்டணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் சேமலாப நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மிகைக் கட்டணம் 2024 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்யப்படும். | சகல பொறுப்புக்களும் இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | 2020 யூலை முதல் 2023 திசெம்பர் வரை 42 மாத காலத்திற்காக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 1,345,988 பங்களிப்புப் பணம் செலுத்தப்படாதிருந்ததுடன் அதற்குரிய செலுத்த வேண்டிய ரூபா 652,809 ஆன மிகைக் கட்டணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மிகைக் கட்டணம் 2024 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்யப்படும். | சகல பொறுப்புக்களும் இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | உடைந்த பொருட்களை அகற்றியதனால் கிடைத்த ரூபா 502,203 ஆன நட்டம் இலாப நட்டக் கணக்கில் சீராக்குவதற்குப் பதிலாக மீள்மதிப்பீட்டு இலாபத்தில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | உடைந்த பொருட்கள் மீள் மதிப்பீட்டுக் கணக்கில் சீராக்கம் சரிசெய்யப்படும். | கணக்கீட்டு தவறுகள் சரிசெய்யப்படல் வேண்டும். |
| (ஊ) | நீராவிய விவசாயப் பண்ணையில் 06 ஊழியர்களுக்குரிய ரூபா 1,729,889 நிலுவை ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்புப் பணம் மற்றும் ரூபா 864,945 மிகைக் கட்டணம் செலுத்தாமல் புறக்கணிக்கப்பட்டிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த நிலுவைத் தொகையில் ஒரு பகுதியான ரூபா 402,513 பங்களிப்புப் பணம் மற்றும் மிகைக் கட்டணம் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பான தகல்கள் கம்பனியால் கால பகுதிக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பான விபரங்கள் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பித்த பின்னர் ரூபா 2,030,402.30 வரை செலுத்த வேண்டிய மீதி குறைக்கப்பட்டதுடன் அந்த மீதி ரூபா 50,000 தவணைப் பணமாக செலுத்துவதற்கு தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. | சகல பொறுப்புக்களும் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (எ) | 05 வருடங்களை விஞ்சிய செலுத்தப்படாத பெறுமதி சேர் வரி, புரள்வு வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிகளுக்குரிய செலுத்த வேண்டிய தண்டப்பணமானன ரூபா 1,797,312 கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீதியை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நியதிச்சட்ட பொறுப்புக்களைத் தீர்த்து வைப்பதற்கும் கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | 2019 ஆம் ஆண்டில் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யும் போது உருவான ரூபா 213,480 ஆன மீள் மதிப்பீட்டு இலாபம் மூலதன ஒதுக்கத்தில் சீராக்கப்படாமல் வருமான ஒதுக்கத்தில் சீராக்கப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டில் மீள் மதிப்பீட்டு இலாபத்தின் தவறை சரிசெய்தல் 2024 ஆம் ஆண்டின் கணக்குகளில் மேற்கொள்ளப்படும். | மீள்மதிப்பீட்டு இலாபத்தை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | ஆண்டின் வருமான செலவினங்கள் சரியாக இனங்காண்பதற்குப் பதிலாக முன்னைய ஆண்டின் நிதி விளைவுகளில் சீராக்கங்களைச் செய்தல் கம்பனியினால் தொடரச்சியாக மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட முறையே ரூபா 5,793,005 தொகை மற்றும் ரூபா 1,325,555 ஆன நட்டம் மற்றும் ரூபா 167,815 ஆன இலாபத்திற்காக கடந்த ஆண்டின் போது ரூபா 5,933,003 தொகை, ரூபா 3,376,919 மற்றும் ரூபா 2,089,263 முன்னை ஆண்டின் சீராக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் காரணமாக கடந்த ஆண்டின் போது முறையே ரூபா 7,987,195 தொகை, ரூபா 1,695,098 மற்றும் ரூபா 291,639 நட்டம் காண்பித்து நிதி விளைவுகளில் 28 சதவீதம் முதல் 274 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. | 2024 ஆம் ஆண்டில் இலாப நட்டக் கணக்கில் குறிப்பாக காண்பிக்கப்படும் என அறியத்தருகின்றோம். | அட்டுறு செலவினத்தின் அடிப்படையில் ஆண்டின் வருமான செலவினம் சரியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | 2020 பெப்ரவரி மாதம் சேவையிலிருந்து விலக்கப்பட்ட மூன்று ஊழியர்களுக்குரியதாக செலுத்த வேண்டிய ரூபா 842,668 ஆன பணிக்கொடை செலுத்த வேண்டிய மீதியாக காண்பிப்பதற்குப் பதிலாக பணிக்கொடை ஒதுக்கத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிலுவைத் தொகையுடன் செலுத்த வேண்டிய மிகைக் கட்டணம் ரூபா 252,800 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய பணிக்கொடை மிகைக் கட்டணத்தை கணக்கீடு செய்தல் 2024 ஆம் ஆண்டில் இறுதிக் கணக்கில் கணக்கீடு செய்யப்படும். | செலுத்த வேண்டிய பணிக்கொடைப் பொறுப்புக்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஓ) | பால் உற்பத்தியின் போது இடைவிளைவாக உற்பத்தி செய்யப்படுகின்ற ஆடைகள் , ஐஸ்கிரீம் மற்றும் பசு நெய் உற்பத்தியின் பிரதான மூலப்பொருளாகப் பயன்படுத்தப்பட்டதுடன் ஐஸ்கிரீம் மற்றும் பசு நெய் உற்பத்தி கிரயம் கணிப்பீடு செய்யும் போது பயன்படுத்தப்பட்ட அந்த பாலின் பெறுமதி கணிப்பிடுவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட விலையொன்று பயன்படுத்தப்பட்டிருந்தது. அலகொன்றின் விலை ரூபா 100 ஆகக் காணப்பட்ட அந்த விலை அந்த அலகொன்றின் ஏற்றுக்கொள்ளப்பட்ட விலை 2022 ஆகஸ்ட் முதல் ரூபா 400 ஆக அதிகரிக்கப்பட்டிருந்தது. இந்த அலகு ஏற்றுக்கொள்ளப்பட்ட விலையை பயன்படுத்தும் போது அடிப்படையாகக் கொள்ளப்பட்ட விடயம், அங்கீகாரம் அதனை அதிகரித்ததன் காரணமாக ஏற்படுகின்ற தாக்கங்கள் தொடர்பாக கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கும், கணக்குகளில் உரிய வெளிப்படுத்தல்களைச் செய்வதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | ஏற்றுக்கொள்ளப்பட்ட விலை மாற்றங்களை மேற்கொள்ளும் போது தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் கணக்குகளில் வெளிப்படுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை (ரூபா) | வழங்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | பொது ஒதுக்கம் | | | | |
| (i) | மகாவலி பொருளாதார முகவராண்மை | 388,362,322 | போதியளவான விபரங்கள் | இந்த மீதி 2009 ஆம் ஆண்டில் கால்நடை வள அபிவிருத்திப் பிரிவின் இறுதிக் கணக்குகளில் காணப்பட்ட மீதியாக இருந்ததுடன் இந்த மீதிகளை உறுதிப்படுத்துவதற்குரிய ஆவணங்கள் கம்பனியிடம் காணப்படவில்லை. இது தொடர்பாக பணிப்பாளர் சபை பத்திரம் ஒன்றை சமர்ப்பித்து இலங்கை மகாவலி அதிகார சபைக்கு இது தொடர்பாக உறுதிப்படுத்தலைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | மீதி உறுதிப்படுத்தல்கள் பெறப்படல் வேண்டும். |
| (ii) | கொத்மலை பால் அபிவிருத்தி நிலையம் | 2,900,000 | | | |
| (iii) | ஐரோப்பா பொருளாதார ஆணைக்குழுவின் மூலதன மானியம் | 3,583,706 | | | |
| (iv) | வெளிநாட்டு நிதியுதவி | 5,729,782 | | | |
| (ஆ) | மூலதன ஒதுக்கம் | 5,271,743 | | | |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இலங்கை மகாவலி அதிகார சபையிலிருந்து கம்பனிக்குக் கிடைக்க வேண்டிய மீதி ரூபா 5,820,430 ஆக இருந்த போதிலும் அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அதிகார சபையால் கம்பனிக்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 12,710,820 ஆனமையால் மீதிகளுக்கிடையே ரூபா 6,890,390 வேறுபாடு காணப்பட்டது. | இலங்கை மகாவலி அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய எந்தவொரு மீதியும் காணப்படாதிருந்ததை உறுதிப்படுத்துகின்றோம். இலங்கை மகாவலி அதிகார சபையின் மூலம் பெறவேண்டிய மீதியில் வேறுபாடாகக் காண்பிக்கப்பட்ட ரூபா 446,460 மீதி இலங்கை மகாவலி அதிகார சபைக்கு நீராவிய விவசாயப் பண்ணையின் கையேற்ற திகதி 2010.09.30 வரையில் விவசாயப்பண்ணைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட உற்பத்தி மற்றும் மூலப்பொருள் இருப்பின் பெறுமதியாக இருந்ததை உறுதிப்படுத்துகின்றோம். | பெறவேண்டிய பணத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 2(1) மற்றும் 102 ஆம் பிரிவுகள் | கம்பனி வருமான வரிக்காக பதிவு செய்வதற்கோ அல்லது வரிவிடுதலை பெற்றுக்கொள்வதற்கோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் போது இதற்காக கவனம் செலுத்தப்படும். | வருமான வரிக்காக பதிவு செய்து கொள்வதற்கோ அல்லது வரி விடுவித்துக் கொள்வதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் II பகுதியின் 5(1) ஆம் பிரிவு | 2020 பெப்ரவரி மாதம் சேவையிலிருந்து விலக்கப்பட்ட மூன்று ஊழியர்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 842,668 ஆன பணிக்கொடைகள் கணக்காய்வுத் திகதியான 2024 மே 31 வரையும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக நடவடிக்கைகளை எடுப்பதற்கு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நீக்கப்பட்ட ஊழியர்களுக்கு பணிக்கொடை கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் பீஈடி 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட செயற்பாட்டுக் கைநூலின் | | | |
| (i) | 3.2 ஆம் பந்தி | பதவியணியினருக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் கொடுப்பனவுக் கட்டமைப்பு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயத்திற்கு அங்காரத்திற்காக அனுப்பப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் போது சமர்ப்பிப்பதற்கு குறிப்பிடுகின்றோம். | ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் செலுத்தும் கொடுப்பனவுக் கட்டமைப்புக்களுக்காக தேவையான அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |
| (ii) | 6.6 ஆம் பந்தி | நிதிக்கூற்றுக்களுடன் வரைவு ஆண்டறிக்கை, செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் போது சமர்ப்பிப்பதற்கு குறிப்பிடுகின்றோம். | வரைவு ஆண்டறிக்கை கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (iii) | 2021 நவம்பர் 16 ஆம் திகதி இலக்கம் பீஈடி 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட பொது முயற்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கான வழிகாட்டியின் 2.3 ஆம் பந்தி | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டம் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் 2024 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டு அங்காரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயல் நடவடிக்கைத்திட்டத்திற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2013 செப்தெம்பர் 11 ஆம் திகதிய இலக்கம் 02/2013 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.5 ஆம் பந்தி | ரூபா 12,598,899 செலுத்த வேண்டிய பணிக்கொடைத் தொகையொன்று இனங்காணப்பட்டிருந்த போதிலும் அந்தத் தொகை தனியான கணக்கொன்றில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரச தனியார் கூட்டுமுயற்சி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் பணிக்கொடை ஒதுக்கீடுகள் தனித்தனியான கணக்கில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | செலுத்த வேண்டிய பணிக்கொடை ஏற்பாட்டுத் தொகை தனியான கணக்கொன்றில் வைப்புச் செய்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 295,392 நட்டமாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 167,815 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகள் ரூபா 463,207 குறைவொன்று அவதானிக்கப்பட்டது. விற்பனை மற்றும் விநியோக செலவினம் ரூபா 662,410 இனால் அதிகரித்தமை மற்றும் பெறுமானத் தேய்வு ரூபா 1,180,070 இனால் அதிகரித்தமை இந்த வீழ்ச்சி தொடர்பில் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கிராந்துருக்கோட்டை விவசாயப் பண்ணையில் விளைவற்று வைக்கப்பட்டிருந்த கிரயம் ரூபா 2,351,000 ஆன 06 வாகனங்களைப் பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது விற்றுத்தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கிராந்துருக்கோட்டை விவசாயப் பண்ணையின் வாகனப் பதிவேட்டில் காண்பிக்கப்பட்டுள்ள இந்த 06 வாகனங்களில் இலக்கம் 42-1470 என்ற தண்ணீர் பௌசர் 2013 மே 15 ஆம் திகதி பழுதுபார்ப்பதற்காக மடாட்டுகம வேலைப்பிரிவிற்கும் இலக்கம் 37 – 6614 என்ற டெக்டர் மற்றும் இலக்கம் 42-832 என்ற லொறி வண்டி ஏலத்தில் விற்பனை செய்வதற்காகவும் இலக்கம் 121-5661 என்ற மோட்டார் சைக்கிள் மற்றும் டெய்லர் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாததாகவும் டெக்டர், பௌசரை பழுதுபார்ப்பதற்காகவும் ஒதுக்கப்பட்டிருந்தது. | இந்த வாகனங்களை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது விற்றுத்தீர்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 ஆம் ஆண்டில் சொத்துக்கள் மெய்மையாய்வின் போது பயன்படுத்த முடியாததாக இனங்காணப்பட்ட ரூபா 9,453,140 ஆன நிலையான சொத்துக்களை விற்றுத் தீர்ப்பதற்காக 2024 ஏப்ரல் 05 ஆம் திகதி வரையிலும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டில் சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யும் போது அவ்வாறு ஒதுக்கப்பட்டிருந்த சொத்துக்களின் மீள் மதிப்பீடு செய்து சொத்துக்கள் பதிவேடு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டின் போது மீண்டும் சொத்துக்களை மெய்மையாய்வு செய்யும் போது உடைந்த பொருட்கள் இனங்காணப்பட்டதுடன் அந்த உடைந்த பொருட்கள் 2022 ஆம் ஆண்டின் போது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | உடைந்த பொருட்கள் தொடர்பாக மெய்மையாய்வுக் குழு பரிந்துரையின் பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | கம்பனி அகவிதிப் பத்திரத்தின் பிரகாரம் உரிமை மூலதனம் ரூபா 10 பங்குகள் 5,000,000 இனால் உள்ளடக்கியிருந்ததுடன் ஆரம்ப பணிப்பாளர்களுக்கு 03 பங்குகள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் ஏனைய பங்குகள் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையும் விநியோகிக்கப்பட்டிருக்க வில்லை. | 2024 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் (ரஞ்சித் அமரநாத் இம்புல்தெனிய) பங்கொன்று D.G.M.A.S.L என்ற பெயரில் மாற்றுவதங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்நதது. மிகுதி இரண்டு பங்குகள் கையளிக்கப்பட்ட பின்னர் பங்குகளை விநியோகிக்கப்படும் என அறியத்தருகின்றோம். | தேவையான பிரகாரம் பங்குகளை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | செயற்திட்டக் குழுவினால் தெரிவு செய்யப்பட்ட வெளி முதலீட்டாளருடன் அரச தனியார் கூட்டு முயற்சியாக கம்பனி மீள் கட்டமைப்பதற்காக 2018 செப்தெம்பர் 18 ஆம் திகதிய இலக்கம் අමප/18/2083/803/031 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அரச தனியார் முகாமைத்துவத்திற்கு உடன்படிக்கை செய்து மீள்கட்டமைப்பதற்காக 2022 சனவரி 18 ஆம் திகதி இலக்கம் අමප/21/2229/317/025-1 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதி வரையிலும் அந்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த வெளிவாரி முதலீட்டாளர்களை தெரிவு செய்யும் பணிகள் முழுமையாக இலங்கை மகாவலி அதிகார சபையினாலே மேற்கொள்ளப்படுகின்றது. | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அரச தனியார் முகாமைத்துவத்திற்கு உடன்படிக்கை செய்யப்பட்ட மீள் கட்டமைப்பதற்கான தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | கிரயம் ரூபா 8,156,000 ஆக காண்பிக்கப்படுகின்ற கம்பனியினால் தற்போது பயன்படுத்தப்படுகின்ற இலங்கை மகாவலி அதிகார சபைக்குரிய 04 வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த வாகனங்களின் உரித்து தாய்க் கம்பனிக்கு சொந்தமாகக் காணப்பட்டதுடன் பயன்படுத்தும் உரித்து கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ளது. | கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்களின் உரித் கையேற்பதற்கு தேவையான நடவடிக்ை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | கம்பனியின் மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயலாற்றல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | கால்நடை வள பிரிவின் கீழ் அமுல்படுத்தப்பட்ட புறெய்லர் இறைச்சி உற்பத்தியின் நிதிசார் செயல்முன்னேற்றம் 11.63 சதவீதம் மற்றும் பௌதீக செயல் முன்னேற்றம் 12.25 சதவீதம் ஆக குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. ஆடுகளை வளர்த்தலின் செயல்முன்னேற்றம் 55.2 சதவீதமாக இருந்த போதிலும் அதன் பௌதீக ரீதியிலான செயல்முன்னேற்றம் 41.46 சதவீதமாக இருந்தது. | சனவரி முதல் யூலை வரை வெளியிலிருந்து இறைச்சி கொள்வனவு செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டிருந்தது. காலாண்டுக்கு 1200kg கொள்வனவு செய்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் விற்பனைத் தேவை இந்த இரண்டு காலாண்டிற்கும் 588 kg மொத்த அலகின் ஆகும். ஆடுகள் பிரிவில் 2023 ஆம் ஆண்டில் கால்நடைகளில் ஒரு சந்தர்ப்பத்தின் போது மாத்திரமே விற்பனை செய்யப்பட்டிருந்தது. | சந்தை ஆய்வினை மேற்கொண்டு நடைமுறை நிலைமையினைக் கருத்தில் கொண்டு செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கம்பனி ஐஸ்கிரீம் லீற்றர் 3,200 உற்பத்தி செய்வதன் மூலம் ரூபா 1.19 மில்லியன் வருமானத்தை உழைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 548 லீற்றர் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டமையால் ரூபா 0.31 மில்லியன் வருமானம் மாத்திரம் உழைக்கப்பட்டிருந்தது. | ஐஸ்கிரீம் உற்பத்தி இயந்திரத்தை மீண்டும் பழுதுபார்க்க முடியாததாக செயலிழந்து இருந்தது. இரண்டாவது காலாண்டின் பின்னர் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது. | நடைமுறை நிலைமையின் அடிப்படையில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரித்து ஸ்தாபிக்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கிராந்துருக்கோட்டை விவசாயப் பண்ணையில் கால்நடை வளர்ப்பு கட்டுப்பாட்டு பயிற்சி நிலையம் ஒன்றாக உட்படுத்தும் நோக்கில் இலங்கை மகாவலி அதிகார சபையின் ''சீ'' வலயத்தால் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது நிர்மாணிக்கப்பட்ட மாட்டுப்பண்ணை, ஆட்டுப்பண்ணைகளை உள்ளடக்கிய நிர்மாணம் ரூபா 9,338,000 ஆன பொருட்கள் 2016 பெப்ரவரி 08 ஆம் திகதி கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த நிர்மாணங்களை பயன்பாட்டிற்கு | ஏனைய தரப்பினரின் தேவையின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்ட இந்தக் கட்டிடம் 2016.02.08 ஆம் திகதி கம்பனிக்கு கையளிக்கப்பட்டதுடன் கட்டிடத்தை பயன்படுத்துவதற்குத் தேவையான கால்நடைகளினைக் கொள்வனவு செய்யும் இயலுமை கம்பனிக்கு காணப்படாதிருந்ததுடன் அதன் காரணமாக தேவையற்ற சொத்துக்களுக்காக பெறுமானத் தேய்வொன்று கம்பனிக்கு | இந்த நிர்மாணங்களை வினைத்திறனாக பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு பொருத்தமான திட்ட முறையொன்றினைத் தயாரித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுப்பதற்காக குறித்துரைத்த திட்ட முறைமையொன்று ஏற்படுத்தப்படாதிருந்ததன் காரணமாக கையளிக்கப்பட்ட திகதியிலிருந்து அந்த சொத்துக்கள் விளைவற்றுக் காணப்பட்டிருந்தது. | கையளிக்கப்பட்டுள்ளது. அந்த வருமானம் கிடைக்கப்பெறாத செலவின பொறுப்பாக இருந்தது. | |
| (ஆ) | கிராந்துருக் கோட்டை கால்நடை பண்ணைக்குரிய 1986 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட 07 கட்டிடங்கள் முழுமையாக உடைந்த நிலைமையில் காணப்படுகின்றமையால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தக் கட்டிடம் 2024 ஆம் ஆண்டில் சொத்துக்கள் மெய்மையாய்வின் போது இனங்கண்டு அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். உற்பத்திக் கூடத்தில் சகல பழுதுபார்த்தல்களும் அரச தனியார் கூட்டுமுயற்சி வியாபாரம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் மேற்கொள்வதற்னு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | உடைந்த கட்டிடங்களைப் பரீட்சித்து பயன்பாட்டிற்கு எடுக்க முடியாதிருக்குமாயின் பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |